வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.2373/ஆ1/2024 நாள்: : 06.2024

பொருள் : தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணி – மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடங்கள் பதவி உயர்வு/ பணிமாறுதல் மூலம் நிரப்புதல் – 2024–2025–ஆம் ஆண்டிற்கான முன்னுரிமைப் பட்டியல் தயாரித்தல் அரசு உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சார்பிலான விவரங்கள் கோருதல் – தொடர்பாக

பார்வை : தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.00292/அ1/இ1/2024 நாள் 11;06;2024

----

பார்வையில் கண்டுள்ளபடி 2024–2025ஆம் ஆண்டுக்கான மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடங்களுக்கு முன்னுரிமைப் பட்டியல் தயார் செய்ய ஏதுவாக தகுதி படைத்த அரசு உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களின் முன்னுரிமைப் பட்டியலின்படி பெயர்ப் பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பெயர்ப் பட்டியலில் தகுதியுள்ள தலைமையாசிரியர் பெயர் ஏதும் விடுபட்டிருப்பின், தலைமையாசிரியர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணையின் நகலினை இணைத்து அனுப்பப்பட வேண்டும். அரசாணை (நிலை) எண்.528. பள்ளிக் கல்வி (ஏ1) துறை நாள்.31.12.1997ல் தெரிவித்துள்ளவாறு, இணைப்பில் உள்ள அரசு உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களிடம் விருப்ப படிவத்தில் (Option Form) பதவி உயர்வு / பணி மாறுதலுக்கு விருப்பம் அல்லது விருப்பமின்மையினை தரப்பட வேண்டும்.

மாவட்ட கல்வி அலுவலர் பதவி உயர்வு/ பணி மாறுதலை தற்காலிகமாக உரிமைவிடல் செய்தவர்களில் தற்காலிக உரிமைவிடல் காலம் முடிவு பெற்றவர்கள் சார்பான விவரங்கள் உரிய படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பபட வேண்டும்.

மாவட்டக் கல்வி அலுவலர் பதவிக்கு விருப்பம் தெரிவித்துள்ள தலைமை ஆசிரியர்கள் சார்பான 01.01.2019 முதல் நாளது தேதி வரையிலான மந்தண அறிக்கைகள் தவறாமல் அனுப்பப்பட வேண்டும் (ஏற்கனவே மந்தண அறிக்கைகள் அனுப்பப்பட்டிருப்பின் மீதமுள்ள காலத்திற்கு அனுப்பப்பப்பட வேண்டும்) மந்தன அறிக்கைகள் பெறப்படாத தலைமை ஆசிரியர்கள் பெயர் மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வு/பணிமாறுதலுக்கு பரிந்துரைக்கப்பட மட்டாது எனத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மந்தண அறிக்கைகள் அரசாணை ( நிலை ) எண்.121 பணியாளார் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள்.29.09.2011இல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றி எழுதப்பட வேண்டும் எனவும், மேற்கண்ட அரசாணையில் இணைக்கப்பட்டுள்ள படிவத்திலேயே மந்தண அறிக்கைகள் எழுதப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது. அசல் மந்தண அறிக்கைகள் மட்டுமே அனுப்ப வேண்டும். மந்தண அறிக்கைகள் உண்மை நகல் அல்லது ஜெராக்ஸ் இணைத்தனுப்பக் கூடாது.

சார்ந்த தலைமை ஆசியர்கள் சார்பான மந்தண அறிக்கைகள் அந்தந்த காலத்தில் பணிபுரிந்த அலுவலகர்களால் எழுதப்பட்டு, மேற்கண்ட காலத்தில் பணிபுரிந்த உரிய அலுவலகர்களால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டிருக்க வேண்டும். மந்தண அறிக்கைகள்

குறிப்பிட்ட காலத்ததிற்கு எழுதப்படவிலை எனில் அதற்கான உரிய விளக்கம் அளிக்கப்பட வேண்டும்.

அரசு உயர் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் பணியிடத்திலிருந்து அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக பதவி உயர்வில் சென்றவர்களின் முன்னுரிமை மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் முன்னுரிமைப்படியே அமையும் என தெரிவிக்கப்படுகிறது.

2024–2025ஆம் ஆண்டுக்கான மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வுக்கு. பரிந்துரைக்கப்படும் படிவத்துடன் கிழ்காணும் விவரங்கள் இணைத்து அனுப்ப வேண்டும்.

1. விருப்பக் கடிதம்
2. உரிய படிவம்
3. அசல் மந்தண அறிக்கைகள்
4. தமிழ்நாடு குடிமுறைப் பணி விதியின் கீழ் குறிச்சாட்டு தொடுக்கப்பட்டிருப்பின் குற்றச்சாட்டின் நகல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கையின் தற்போதைய நிலை மற்றும் தன்டனை அளிக்கப்பட்டிருப்பின் அதன் நகல் மற்றும் தண்டனை நிறைவேற்றப்பட்டமைகான ஆவணங்கள்

இணைப்பில் உள்ள பெயர்பட்டியலில் இடம்பெற்றுள்ள அரசு உயர்/ மேல் நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் சார்பான விவவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்து 20.06.2024 அன்று மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் கருத்துருக்கள் முழுமையான வடிவில் இரண்டு நகல் முதன்மை கல்வி அலுவலக ஆ1 பிரிவில் மாலை 5 மணிக்குள் நேரில் சமர்பிக்க வேண்டும் எனவும் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் சார்பான கருத்துருக்கள் மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) அலுவலகத்தில் 20.06.2024 அன்று பகல் 12 மணிக்கு ஒப்படைக்க வேண்டும். பெறப்பட்ட கருத்துருக்கள் தொகுத்து மேல் குறிப்பட்ட பிரிவு எழுத்தரிடம் ஒப்படைக்க வேண்டும். இதில் கால தாமதம் தவிர்க்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு

1. விருபப் படிவம்
2. முன்னுரிமை பட்டியல்
3. படிவம்

//ஒப்பம் //

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்:

1. மாவட்ட கல்வி அலுவலர் (இடை நிலை)
2. அனைத்து உயர் / மேல் நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்